# தமிழ்நாடு மின்வாரிய தொழிற் சங்கங்களின்
# கூட்டு நடவடிக்கை குழு
# சென்னை

நாள் : 22.08.2016

அன்புள்ள தோழரே, வணக்கம்.

## செப்டம்பர் 2
## அகில இந்திய பொது வேலை நிறுத்தத்தை
## வெற்றிபெறச்செய்வோம்

கோடானகோடி தொழிலாளர்கள், விவசாயிகள், நாட்டுமக்களோடு இணைந்த 12 அம்ச கோரிக்கைகளை முன்வைத்து, மத்திய தொழிற் சங்கங்களும், தொழில்வாரியான சம்மேளனங்களும் இணைந்து வரும் **செப்டம்பர் 2 அன்று மாநிலந்தழுவிய 17வது பொது வேலை நிறுத்தத்திற்கு அறைகூவல் விட்டுள்ளனர்.**

மத்திய அரசாங்கம் கடைபிடிக்கும்கொள்கையினால் மக்களின் சமூக பாதுகாப்பு திட்டங்களை கைகழுவி ஊதியக் குறைப்புக்கு வழிவகுத்து உள்நாட்டு, வெளிநாட்டு பெருமுதலாளிகளின் கொள்ளைச் சுரண்டலுக்கு இந்தியர்களை ஆட்படுத்துகிறது.

நிரந்தர தொழிலாளர்களை முற்றாக ஒழித்து காண்ட்ராக்ட் முறையும், அவுட்சோர்சிங் முறையையும் பலப்படுத்தி உழைப்புச் சுரண்டலை அரங்கேற்றுகிறது. நாட்டின் வளர்ச்சிக்கு உறுதுணையாக உள்ள பொதுத்துறை நிறுவனங்களின் சொத்துக்களை தனியாருக்கு விற்கிறது. இந்திய மின்துறையை உள்நாட்டு அந்நிய முதலீட்டாளர்களின் கொள்ளைக் காடாக மாற்ற முயற்சிக்கிறது. ரயில்வே, பாதுகாப்புத்துறை, இன்சூரன்ஸ் ஆகியவற்றில் அந்நிய நேரடி முதலீட்டை அனுமதித்துள்ளது.

இயற்கை வளங்களை பெருமுதலாளிகள் கொள்ளையிடுவதற்கு துணைபுரிகிறது மானியங்கள், சுகாதாரம், கல்வி உள்ளிட்ட சமூக பாதுகாப்பு செலவினங்களை குறைத்துக் கொண்டே வருகிறது. சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய்யின் விலைகுறைப்பிற்கு ஏற்ப பெட்ரோல், டீசல் விலையை குறைத்து அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வை கட்டுப்படுத்துவதற்கு பதிலாக கலால்வரி போன்றவைகளை அதிகப்படுத்தி வர்த்தகசூதாட்டத்தின் மூலம் அனைத்து அத்தியாவசிய பொருட்களின் விலையை செங்குத்தாக உயர்த்த வழிவகுக்கிறது.

தொழிலாளர் நல சட்டங்களை சிதைப்பது, தொழிற் சங்க உரிமையை பறித்து கூட்டு பேர உரிமையை சீரழித்து வருகிறது. மிகபெரும்பாலான தொழிலாளர் நலச் சட்டங்களின் பாதுகாப்பு பெற முடியாமல் தடுத்து தொழிற்சாலை, நிறுவனங்களை, இச்சட்டங்களின் விளிம்பிற்கு கொண்டு செல்ல முயற்சித்து வருகிறது.

விலைவாசி உயர்வு, வேலை வாய்ப்பை உருவாக்காதது, இருக்கின்ற வேலையை பறிப்பது, ஓய்வூதியம் போன்ற சலுகைகளை வெட்டுவது ஆகிய செயல்கள் உழைப்பாளி மக்களின் வாழ்வாதாரத்தை கேள்விக்குறியாக்கி உள்ளது.

இச் சூழலில் மத்திய தொழிற் சங்கங்கள், பாடுபடும் உழைப்பாளிகள் சாதாரண மக்களுக்கு எதிரான அரசின் கொள்கையை எதிர்த்து நடத்தும் வேலை நிறுத்தம் தேச நலனுக்கு இன்றியமையாத ஒன்றாக கருதுகிறது.

தொழிலாளர் உரிமைகளை பறிப்பதிலும், மின்சாரம், போக்குவரத்து போன்ற மாநில பொதுத்துறை நிறுவனங்களை சிதைப்பதிலும் மாநில அரசுகள் பின்னணியில் உள்ளது. முதலாளிகளின் நலத்துறையாக தொழிலாளர் நலத்துறை மாற்றப்பட்டுள்ளது. பொதுத்துறை நிறுவனங்களில் தேவையற்ற அரசியல் தலையீடுகள் அதிகரித்துள்ளன.

இவைகளின் பின்னணியில் 12 அகில இந்திய தொழிற் சங்கங்களும், தொழிற் வாரியான சம்மேளனங்களும் விடுத்துள்ள 12 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி 2016 செப்டம்ர் 2 அன்று நாடு தழுவிய அளவில் நடைபெறும் பொது வேலை நிறுத்தத்தில் மின்வாரிய பொறியாளர்கள் தொழிலாளர்கள், ஊழியர்கள், ஒப்பந்த தொழிலாளர்கள் அனவைரும் கலந்து கொள்வது என்று 23.08.2016 அன்று கூடிய மின்வாரிய தொழிற் சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக்குழு முடிவு செய்துள்ளது.

## தயாரிப்பு பணிகள்

- வேலை நிறுத்தம்வெற்றிபெற -வேலை நிறுத்தத்திற்கு முன்வைத்துள்ள கோரிக்கைகளை திட்டமட்டத்தில் கூட்டாக பிரச்சாரம் செய்வது.
- தமிழக மின்துறையில் வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ளும் தொழிற் சங்கங்களின் கூட்டு **வேலை நிறுத்த பிரகடன கூட்டம் 30.08.2016 அன்று சென்னை மின்வாரிய தலைமையகம் முன்பு நடத்துவது.**
- வேலை நிறுத்தத்திற்கு அறைகூவல் விட்டுள்ள தொழிற் சங்கங்களின் மாவட்ட அமைப்புகள் நடத்தும் அனைத்து பிரச்சார நடவடிக்கைகளிலும் மின்வாரிய ஊழியர்கள் கலந்து கொள்வது.
- வேலை நிறுத்த முன்னறிவிப்பை அறிவிக்காத சங்கங்கள் உடனடியாக மின்வாரிய நிர்வாகத்திற்கு வேலை நிறுத்த அறிவிப்பை அறிவிப்பது.

...என இக் கூட்டுக் குழு முடிவு செய்கிறது.

இவைகளின் பின்னணியில் இந்த வேலைநிறுத்தத்தை வெற்றிகரமாக்கிட அனைத்து பணிகளிலும் ஈடுபட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

பொதுச் செயலாளர்
மின்சார தொழிலாளர்
சம்மேளனம்

பொதுச் செயலாளர்
தொழிலாளர் முன்னேற்ற
சங்கம்

பொதுச்செயலாளர்
தமிழ்நாடு மின்ஊழியர்
மத்திய அமைப்பு

(டி.வி. சேவியர்)
பொதுச் செயலாளர்
ஐ.என்.டி.யு.சி TNNEWF

பொதுச் செயலாளர்
தொழிலாளர் பொறியாளர் ஐக்கிய சங்கம்
(எச்.எம்.எஸ்)

பொதுச் செயலாளர்
தமிழ்நாடு மின்வாரிய
பொறியாளர் சங்கம்
23/8/16

பொதுச் செயலாளர்
தமிழ்நாடு மின்வாரிய
பொறியாளர் கழகம்